DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 134/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பரத்பூஷன் |
| Father / Husband Name | சுந்தரம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **18.09.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ராமாபுரத்தில் வசித்து அரசு ஆவின்பாலகத்தில் பால் விற்பணையாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 29.01.2025 ம் தேதி காலை 6.00 மணிக்கு வேலாமூர் கிராமத்தில் பால் வாங்குவதற்காக பால் சொசைட்டிற்கு சென்றேன். கஸ்தூரி என்பவர் பாலில் தண்ணீர் கலந்தை நான் கேட்டேன். எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் அவரிடம் பால் வாங்கிவிட்டு அவரும் சென்றுவிட்டார். இது சம்மந்தமாக எனது அப்பா சுந்தரம் என்பவரிடம் சொல்லிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னை தடியால் என் தலையில் அடிக்க வந்தார். நான் தடுத்தபோது இடது கையில் அடித்ததில் எனக்கு வீக்கம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி நான் சென்ற Tn 19 Y 6502 என்ற பதிவெண் கொண்ட என் அப்பாவிற்கு சொந்தமான இருச்சர வாகனத்தை தடியால் அடித்து உடைத்ததில் மேற்படி வண்டியின் கேனில் இருந்த பால் கீழே ஊற்றிவிட்டது. என்னை பார்த்து உன்னை தீர்த்து கட்டாமல் விட மாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். 29.01.2025 ம் தேதி காலை சுமார் 7.30 மணிக்கு புகார் கொடுத்தேன். நான் மருத்துவமனைக்கு காலை சுமார் 8.30 முதல் 9.00 மணிக்குள் சென்றேன். மருத்துவமனையில் என் மனைவி பவித்ரா மற்றும் எனது மாமா கிருஷ்ணன் என்பவரும் என்னை அனுமதித்தார்கள். நான் மருத்துவமனைக்கு செல்லும்போது சுயநினைவோடு தான் இருந்தேன். நான் கொடுத்த புகாருக்கு CSR மனு கொடுக்கப்பட்டது. அதனை எனது அப்பா வாங்கினார். அவர் எந்த தேதியில் வாங்கினார் என்று ஞாபகம் இல்லை. நான் பொது மக்களிடம் பாலை வாங்கி அதனை நானே

விற்பணை செய்து வருகிறேன். எனக்கு சம்பளம் ஆவின் பாலகத்தில் கொடுப்பார்கள். 29.01.2025 ம் தேதி நான் பால் கொள்முதலில் இருந்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேனா என்றால் இல்லை. பாலின் தரத்தை பரிசோதனை செய்ய உபகரணம் ஏதேனும் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். ஆஜர் எதிரியின் அம்மா கொடுத்த பாலின் தரத்தை உபகரணம் வைத்து சோதித்து பார்த்தேனா என்றால் இல்லை.

3. பொதுவாக பால் கரப்பவர்கள் அனைவரும் பால் கரக்கும் பாத்திரத்தை என்னிடம் காட்டிவிட்டு கரப்பார்கள். ஆனால் ஆஜர் எதிரியின் அம்மா பாத்திரத்தை என்னிடம் காட்டாமல் அப்படியே பாலை கரந்தார். 29.01.2025 ம் தேதி கொள்முதல் செய்த பால் அனைத்தையும் ஆஜர் எதிரி அடித்து கீழே தள்ளி சேதப்படுத்தியதை எனது மேல் அதிகாரிக்கு முறையாக தபால் மூலம் சொன்னேனா என்றால் இல்லை. போன் மூலம் தகவல் சொன்னேன். கொள்முதல் செய்த பால் சேதமடைந்தால் அதற்கான மெமோ ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. சேதமடைந்த பாலுக்கு என்னிடம் மெமோ எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆனால் அன்றைய தினத்தில் பால் கொள்முதல் அளவு குறைந்து இருந்ததற்கான பில் கொடுத்துள்ளார்கள். அதற்கான பில் என்னிடம் உள்ளது. பொதுமக்களிடம் இருந்து பால் வாங்கும் போது எனது கேனில் வைத்து தான் அவர்கள் பாலை ஊற்றுவார்கள்.

4. அப்போது பால் சிறிது வழிந்து விழும் என்றால் சரிதான். பொதுவாக 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பால் கேனில் கூடுதலாக 1 அல்லது 2 லிட்டர் பால் வரும் என்றால் சரிதான். பொதுமக்களிடம் வாங்கும் பாலுக்கும் அரசுக்கு கொடுக்கும் பால் அளவுக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால் சரிதான். பொது மக்கள் கொடுக்கும் பாலுக்கு மட்டும் தான் பணத்தை கொடுப்போம் என்றாலும் கூடுதலாக உள்ள பாலுக்கு வரும் பணத்தை நாங்கள் வைத்துக்கொள்வோம் என்றாலும் சரிதான். நான் வேலை செய்யும் ஆவின் பாலகம் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது ஆகும். மேற்படி பாலகத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுமா என்றால் வருடத்தில் ஒரு முறை தீபாவளிக்கு போனஸ் கொடுக்கப்படும். 29.01.2025 ம் தேதி நான் பால் வாங்கவில்லை என்றாலும் எனது மனைவி பவித்ரா என்பவர் தான் வாங்கினார் என்றும் சரியல்ல. நான் பால் வாங்கும் இடத்தில் நான் பாலை வாங்கியதற்கு ஆதாரமாக மேற்படி சி சிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது. பொதுவாக உடல் நிலை சரியில்லாத போதும் நான் வெளியூர் செல்லும்போதும் எனது அப்பா எனக்கு பதிலாக பால் வாங்குவார்.

5. ஆஜர் எதிரியின் அம்மா போனஸ் ஏதும் கொடுக்கவில்லை என்று என்னிடம் கேட்டுள்ளாரா என்றால் இல்லை. 29.01.2025 ம் தேதி நான் பால் வாங்கவில்லை என்றாலும் எனது மனைவி பவித்ரா என்பவர் பால் வாங்கும்போது ஆஜர் எதிரியின் அம்மா அதிகப்படியான பால் ஊற்றவில்லை என்பதால் தான் சண்டை வந்தது என்றால் சரியல்ல. அப்போது எனது மனைவி தள்ளிவிட்டதால் தான் ஆஜர் எதிரியின் அம்மாவின் பால் கீழே விழுந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் என் மனைவியுடன் சண்டை போட்டதால் தான் ஆஜர் எதிரியிடம் நான் சண்டை செய்தேன் என்றால் சரியல்ல. என் மனைவி கூட்டுரவு சங்கத்தால் நிர்ணயிக்கப்படாத நபர் என்பதால் தான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது எனது மனைவி பவித்ரா என்றால் சரியல்ல. எனது மாமா கிருஷ்ணன் என்னை அழைத்து சென்றார். பதிவு செய்த விபத்து பதிவேட்டில் எனது மனைவி பவித்ரா தான் என்னை அழைத்து சென்றதாக உள்ளது என்றால் எனது மனைவியும் எனது மாமாவும் அழைத்து சென்றார்கள். உண்மையில் பொது மக்களிடம்

கொள்முதல் செய்த பால் வீணாக போயிருந்தால் அதனை குறித்து முறையாக என் உயர் அதிகாரிக்கு தபால் மூலம் தகவல் தெரிவித்திருப்பேன் என்றாலும் அவர்களும் அதற்கு மெமோ கொடுத்திருப்பார்கள் என்றாலும் அவ்வாறு சேதாரம் எதுவும் உண்மையில் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

6. என்னிடம் போதுமான தரநிர்ணயம் செய்யும் கருவி இருந்தபோதும் அதனை உபயோகப்படுத்தாமல் வெறுமையாக பாலில் தண்ணீர் கலந்துள்ளது என்று வாக்கு வாதம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் பாலின் தண்ணீர் கலந்திருந்தால் அதனை சோதித்து தரநிரணயம் சான்று வைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரியின் அம்மா தொடரந்து போனஸ் கேட்கிறார் என்பதாலும் பொது மக்களிடம் வாங்கிய பாலுக்கு உரிய பணத்தை கொடுக்காமல் நானும் என் உயர் அதிகாரியும் கையாடல் செய்ததை ஆஜர் எதிரி கேட்டதால் தான் அவர் மீது பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**